Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 17/2013

Deposition of witness for: PW - 12

| | | | |
|---|---|---|---|
| Name | : மாடசாமி | Father/Husband Name | : குழந்தைவேல் |
| Age | : | Calling | : |
| Date | : 29.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 29 day of 06.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது மதுரை மீனாட்சி அம்மன் கோவில் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஏற்கனவே 2012ம் ஆண்டு மேலூர் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 02.03.2012ம் தேதி மேலூர் காவல் நிலைய பொறுப்பில் சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன், அய்யனன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று மேலூர் காவல் நிலைய குற்ற எண் 174/2012 பிரிவுகள் 279, 304(A) இதசன்படி வழக்கு பதிவு செய்து முதற்கட்ட புலன்விசாரணை முடித்து மேற்கட்ட புலன்விசாரணைக்கு என்னிடம் வைத்து வழக்கு கோப்பை நான் 06.03.2012ம் தேதி எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்ததில் முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை ஒத்தும், சாட்சிகளின் வாக்குமூலங்கள் சார்பு ஆய்வாளரிடம் கூறியதால் என்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான சிவராஜ் மற்றும் சுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதற்கட்ட விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தலைமை காவலர் பழனியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

07.03.2012 ம்தேதி வழக்கின் எதிரியானவர் நிலையத்தில் ஆஜரானவரை நிலையத்தில் வைத்து கைது செய்து நிலைய வசம் ஒப்படைத்து தக்க ஆவணங்களை தயார் செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.

பின்னர் இவ்வழக்கில் விபத்துக்குள்ளான வாகனம் TN 58 T 3717, பதிவெண் கொண்ட TATA ACE மற்றும் TN 59 BZ 3233 BAJAJ DISCOVER வாகத்தை ஆய்வு செய்து சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விஜய் என்பவரை விசாரித்து சான்று பெற்றுள்ளேன்.

30.03.2012 ம் தேதி பின்னர் இவ்வழக்கில் இறந்த நபருக்கு சடல கூராய்பு மேற்கொண்ட மேலூர் அரசு மருத்துவர் திரு.முரளிபால்கண்ணன் என்பவரை விசாரித்து சடல கூராய்பு அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து 30.03.2012 ம் தேதி எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதசவின்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சிவராஜ் என்பரையும், சுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். எனது விசாரணையில் மேற்கூறிய இரண்டு சாட்சிகளும் சூர்யா வாட்டர் சர்வீஸ் அருகே நின்று கொண்டிருந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் சூர்யா வாட்டர் சர்வீஸ் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்கூறிய இரண்டு சாட்சிகளும் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் விபத்திற்குள்ளான வாகனங்களை விபத்து நடந்த இடத்திற்கு வந்து ஆய்வு செய்துதாக அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசாஆ 4 எதிரிக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார். இறந்த நபர் ஓட்டி வந்த வாகனத்திற்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததாக அசாஆ 5ல் குறிப்பு இல்லை என்றால் சரிதான். அதேபோல் அசாஆ 4 மற்றும் 5, டயர் உராய்வு தடம் இருந்ததாக குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். எனவே, வாகன ஆய்வாளர் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் விபத்து நடந்த இடத்தில், விபத்து ஏற்பட்டதற்கான சேதப்பொருட்கள் இருந்ததாக குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான்.

2) எதிரியை எங்கு வைத்து நான் கைது செய்தேன் என்றால் காவல் நிலையத்திற்கு முன்பு வைத்து கைது செய்தேன். யார் முன்பாக வைத்து கைது செய்தேன் என்று கைது குறிப்பாணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரி அதிவேகமாவும், அஜாக்கிரதையாக வந்து விபத்து ஏற்படவில்லை, விபத்தில் இறந்தவர்தான் பல்சர் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக வந்து, அவரது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர்

இறந்துவிட்டதனால் அவரது குடும்பத்தினருக்கு இழப்பீடு பெறுவதற்காக சார்பு ஆய்வாளர் பதிவு செய்த வழக்கிற்கு, எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்மனுவில் எந்த நபரிடம் விசாரித்து நான் தெரிந்துகொண்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் தகவல் தெரிந்துதான் காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் எதிரியை கைது செய்யவில்லை, எதிரி இறந்தவர் மீது புகார் கொடுக்க வந்தார், அவ்வாறு புகார் கொடுக்க வந்தவரரை நான் கைது செய்தேன் என்றால் சரியல்ல.